258
R11-
MADRAS
Q26:417.2118.M
N12
85490

உ

அன்னபூர்ணா ஸஹாயம்.

மருதமலை சிவசுப்பிரமணியர்

மலிதலருள்

கீர்த்தவணத் தோத்திரப் பதிகம்.

OFFICE OF THE REGISTRAR
MADRAS



இஃது

கோயமுத்தூர்

ரா. தம். குருநாத சாஸ்திரி இயற்றியது

கோயமுத்தூர்

அருளானந்த சபை காரியதரிசியும் ஸ்ரீமான்

சண்முகானந்தஸ்வாமிகளின் மாணாக்கருமாகிய

ஜவுளிக்கடை

தா. நாராயணகவுடரவர்களால்

மேல்பார்வையிடப்பட்டு

கோயமுத்தூர்

சரஸ்வதி விலாச பிரஸ்ஸில் பதிப்பிக்கப்பட்டது.

விரோதி கிருது-ஹூ

1912.

கோயமுத்தூர் தமிழ் பண்டிதர் சி. எல். சொக்கலிங்கம் பிள்ளை
அவர்கள்.
பாடிய

நிலை மண்டில வாசிரியப்பா.

மலர் தலை ஞாலத் திலதுயி ரெல்லாந்
துன்பந் தீர்வு மின்ப மாரவுந்
திருவுளங் கொண்டே யருளுரு வாய
வொண்ணுதற் பாகன் கண்ணுதற் பெருமான்
கருதிய வடியா ரிருதய மலரில்
ஆவலோ டமர்தரு, தீவிர கதியினன்
நாலு மறைகளு மோல மிடுபவன்
மலையில் லான்பொன் மலையில் வானோர்
பேரு ரில்லான் பேரு ரில்லா
வீன்றிடு பாலன் வான்றுயர் தீரச்
சூர் குலத்தை வேரோ டறுத்த
காவலர் போற்றுஞ் சேவலங் கொடியோ
கடவுள் யானையு மடல்சேர் மானும்
வெப்பங் கூர்தரு மொப்புயர் விகந்தோன்
கருதிவீற் றிருக்கும் மருதமா மலையின்
விஞ்சிய வளமு மெஞ்சலில் திறமும்
பாருள வுயிர்க ளார்வ மிகுந்தே
பஜனை செய்கையிற் பஜனை பண்ணுத
லாம்படி செய்தினன் தேம்படி மலர்கொண்
டன்னூர். ணையெனு மன்னையி னருள்வேட்
டதுதின மருச்சனை கனிவுடன் புரிவோன்
காசினி புகழும் ராச புரோகிதன்
சோதிடங் கூறு மாதிட முடையோ
னாரிய மொழியிற் கூரிய மதியினன்
செந்தமிழ் தேர்தர முந்துறு முளத்தன்
வெங்கிட சுப்பன் பொங்கிய தவந்தா
னிங்குருக் கொண்டே தங்கும் குறியினன்
கிதம் பயில்குரு நாத சாஸ்திரி
பெறுமயி தானந் தினிய வியப்பேனே.

MADRAS 24 . . 1912

கோயமுத்தூர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ. சாமிநாத ஸ்வாமிகளின் முதன் மாணாக்கராகிய

க. வீரைய நாயக்கரென்னுஞ் ஜோதியம்பல தாசரால்

இயற்றிய.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

காருலவு பொழிற்றேன்வைப் பதியினெழிற்
கோவை யெனுநகர் காட்சிப் பேருஞ்
சீருலவு மகம் பணியுங் குலதிலக
மென வுதித்துச் செவ்வேட் கன்பா
வீருலவு பணிபூண்ட ஜோதிட குருநாத
சாஸ்திரி யென நிகழும் பேரா
னேருலவு மலிதலருள் கீர்த்தனைத் தோத்திர
மெனு மினிய நூலமைக்கின்றார்.

அன்னபூர்ண ஸஹாயம்.

விநாயகர் வணக்கம்.

சீர்தரு நல்ல கதிர்வரி யிக்கு திகழுறு சூதம ரம்பை [ந்தே
ஏர்படி தரமேவார் கிளாங்களி யெல்லாம் கண்பறித் தீந்திடுந ணர் விரி-
பேர்பெறு வளத்த செழியபூ தலமா மடுக்கலி லினிதம ரீசன் [ல்
சூர்தெறு முருகன் புகழினைப் பாடத் தும்பியா னனற்பணி குவமா

இதனது தாத்பரியம்:—நெல்லுங் கரும்பும் வாழையு மாவும், தென்னையும் பிறவுஞ் செழித்து வளர்ந்துக் கண்டவர் கண்களைப் பறிக்குமாறு அழகுற நின்று, அரும்பு மலர் காய் கனிகளை யடுத்து வருபவரனைவோர் தமக்கும் அளித்துதவும் வளப்பம் மிகுதியுமுடைய மருதமலையின் கண்ணே திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் பரமனும், தேவர்கள் துயரந்தீர்த்து அவர் தமைக் காத்தற்பொருட்டு சூர்க்குல மனைத்தும் வேரறக் களைந்த பரம கருணாநிதியும் முருகன் என்னுமோர் அருமைத் திருநாமத்தை யுடையவரும் ஆகிய ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளைக் கீர்த்தனைப் பாக்களால் துதித்திட எமக்கு வாக்குச் சுத்தியும் சித்தியும் அருட்படி ஈடேற்ற யானைமுகத்தினையுடைய விநாயகக் கடவுளை நாம் வணங்குவோம் என்பதாம்.

அன்னபூர்ணு ஸஹாயம்.

வினாயகர் துதி.

கலி விருத்தம்.

அகவு மாமயி லார்முரு கன்கழல்
இகல்கெ டுப்பிடி யேத்தித்து தித்திட
சகமெ லாந்தொழுந் தந்தியி னின்பத
யுகள நாடொரு முள்கனிந் தேத்துவாம்.

அடியார் பெருமை.

நேரிசை வெண்பா.

சண்ட னனுகாத் தவஞ்செய்யு மாபெருந்
தொண்ட ரடிகளைநா டோறுமிகக் — கண்டு
பணிவோர்கள் தங்கள் பவவினைக ளெல்லாந்
தணிவோர்க ளாவார் தக.

குருவருட்டிறம்.

நேரிசை வெண்பா.

நிமித்த மறியச்செய் நிந்தையிலாத் தூயோன்
கமித்த வறிவிற் கடையேன் — சமத்துவமாய்ச்
செய்யுமிந் நூலின் சிறுமை புறங்காத்துப்
பெய்யுங் கருணைமழை பின்.

அவையடக்கம்.

நேரிசை வெண்பா.

யானியம்பிக் கீர்த்தனத்தி லெங்கெங்குங் குற்றமிகத்
தானியங்கு மென்கை தவறன்றே — ஞானமுணர்
நல்லோரிந் நூற்குறைதனை நகைக யாதிருப்பர்
அல்லோர் குறைசொலினென் னாம்.

ஸ்ரீ

அன்னபூர்ண ஸஹாயம்.

இராகம்-மோடி தாளம் மிஸ்ரம்.

பல்லவி.

நாத நாத நாதா குரு நாத நாத நாதா

அநுபல்லவி.

நாத நாதா நாதா குரு நாத நாதா நாதா குரு
நாத நாதா நாதா குரு நாத நாதா நாதா குரு (நாத

சரணம்.

1. அண்டங்களறிந்த தொரு தொண்டனாகவே வரு
விண்டதொரு ஆதிசிவ (நாத

2. முத்திக்கனுகூல சில பத்தியளி நாதா வேலா
சித்தமதில் சுத்தி நின்ற (நாத

3. முறைதன்னையெண்ணி நாத நிறைதன்னைத் தந்த பாத
அறையுமொழிக்கருளிய குரு (நாத

4. ஆதியென்றேனுன்னை. சோதியாதே யென்னை
நீதியுடனருள் தந்த (நாத

5. பாலகுருநாதன் நம்பும் நீலகண்டனின் சுதனே
சாலம் செய்யாதே குரு (நாத

சக்தியின் மகிமையன்றி வேறில்லையே, என்கிற சந்தம்

இராகம்-பியாக், தாளம்-மிஸ்ரம்.

பல்லவி.

சொந்தலனுகாப்பார்த்தருளுமீசனே ஈசனே ஈசனே

அனுபல்லவி.

கந்தனையீன்றவா எனைக்காக்கவே நீயோடி வா
நந்தியென்றுனை சந்தி தொழுதேனே
ஆதியே பரஞ் சோதியே மனக் (சொர்

சரணம்.

கரியையுரித்தவா விரித்துமே நீ போர்த்தவா
பரியை நரியாக்கும் பரமசிவமென்
வருக கருதினே னுறுதியெந்தனைக் (சொர்

கங்கையைகொணர்ந்தவா—திங்களையணிந்தவா
மங்கையுடன் வரு சிங்கமெனுஞ்சிவ
தங்கி குருநாதன் அங்கம் பணிகிறேன் (சொர்

மக்களா அருமை மக்களா, என்கிற சந்தம்,

இராகம் தேசிகமுகாரி அடதாளம்.

பல்லவி.

ஈசனே பர மேசனே.

அனுபல்லவி.

ஈசனென்றுனே யடிகள் பணிந்தேனே
நேசனே ஜக தீசனே. (ஈசனே

சரணம்.

1\. அய்யனே எந்தன் துய்யனே
அத்தியுரித்தவா கத்திக்கருதினேன்
பத்தி செய்தேனே முத்தி தருவாயே (ஈசனே

2\. ஆதியே பரஞ் சோதியே
அருகனெனவுனே யடிமை தொழுதேனே
வருகவுனதடி பருக ஆடினேன் (ஈசனே

3. கார்ப்பாயே குறை தீர்ப்பாயே
சிதை நொடிக்கவுஞ் சாது துடிக்கவுந்
தாளைதயென உன தடிகள் காணேனே (ஈசனே

4. நாடினேன் புகழ் பாடினேன்
நாடியணுகினந் தேடிமுனதடி
பாடிப்புகழுறும் பாலகுருநாதன் (ஈசனே

இராகம்—தோடி. தாளம்—ஆதி.

பல்லவி.

ஈசனே நாடிவா நேசனைத்தேடிவா

அநுபல்லவி.

ஈசா கைலசா புரவாசா உமைநேசா மனப்
பூர்த்தி நீ செய்ய வா வா மனப்
பூர்த்தி நீ செய்ய வா வா. (ஈசனே

சரணம்.

1. காணாதிளைத்தேனே கோணாதழைத்தேனே
ஆதியே ஜோதியே நீதியா யோடி வா வா எனைத்
தேடி நீ யோடி வா வா எனைத்
தேடி நீ யோடி வா வா. (ஈசனே

2. பத்திக்கனுகூல முத்தியளி சில
உனைத்தேடி மனம் வாடி புகழ் பாடி மிக ஓடியே நான்
தேடியலைகிறேனே மனம்
வாடிக்குலைகிறேனே (ஈசனே

3. பால குருநாதன் நம்பித்தொழுதிட
அய்யனே துய்யனே மெய்யான மூர்த்தியே வா குலக்
கையனே யோடி வா வா உந்தன்
பையனைக்காக்க வா வா. (ஈசனே

முருகக்கடவுள் மீது கீர்த்தனை.

மானேவாடி கூடலாம், மருவியேவிளை யாடலாம் என்கிற சந்தம்.

இராகம் - சங்கராபரணம் தாளம்-ஆதி.

பல்லவி.

ஆறுமுகவேலனே   காருஞ் சத்தி பாலனே

அனுபல்லவி.

அருளே வர மருளே பரம் பொருளே நல மருளுவாய் (ஆ

சரணம்.

1. முத்திக்கனுகூலனே   பத்தி செய்தேன் வேலனே
மனமே யனு தினமே யுனைக் கனமா யடிபணிந்தேனே (ஆறு

2. கந்த முருகேசனே   தந்தைக்குப் தேசனே
கண்டேன் பதங் கொண்டேன் மனம் விண்டே யடி தொழுதேனே

3. சத்தி வடிவேலவா   வெற்றிமயிலேறி வா
சுக வாசம் பவ நாசம் எனை நேசம் புரிகுவாய். (ஆறு

4. புள்ளி மயில் வாகனா   வள்ளி மகிழ் மோகனா
பாதம் குரு நாதன் பணி வேதன் மறை முதல்வனே (

நீலாமயூரமீதி லோலா சிங்காரனே, என்கிற சந்தம்.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

மருதகிரியின் மீது   கருதியே நின்றவா
மருட்டதை நீக்க வந்தவா   பதந் தந்தவா
மருட்டதை நீக்க வந்தவா.   அய்ய

அனுபல்லவி.

மருகி மணம்   முருகன் மீது
பெருக லாக   உருகித்தணிந்த (மருத

சரணம்.

1. கலையதை யோதினேனே   இலையதை நீக்குவாய்
கொலையரின் ஞானம் போக்குவாய்   எனை நோக்குவாய்
கொலையரின் ஞானம் போக்குவாய்   சுர
கங்கையணிந்த   சங்கரன் முதல்
அங்கம் பணிந்து   தங்கித்துதிக்கும் (ம

2. நகையாசப்பணியுந்தொண்டர்   வகையது கொஞ்சமா
நாசமாக என்ன பஞ்சமா   இது வஞ்சமா
நாசமாக என்ன பஞ்சமா   சேயன்
நச்சனுடனே   மெய்ச்சல் செய்தேனே
அச்சமதனுகா   யிச்சையுடன் வர   (மருத

3. பாதம்பணியுந்தொண்டன்   மீதினில் வர்மமா
பாவி முன் செய்த கர்மமா   இது தர்மமா
பாவி முன் செய்த கர்மமா   பணி
பத்தர்க்கருளும்   முத்தனேயுன்னை
நித்தம் பணிந்து   சித்தம் குளிர்ந்தேன்   (மருத

4. வஞ்சகமேனேவின்னம்   பஞ்சையின் மீதினில்
செஞ்சேவற்கொடிவேலனே   உமை பாலனே
செஞ்சேவற்கொடிவேலனே   பதத்
தஞ்சமென்றுன்னை   அஞ்சலி செய்தேன்
கெஞ்சுமுறைதன்னை   கிஞ்சிற்றுக்கேளும்   (மருத

5. சந்ததம் பாலகுரு   நாதன் பணிந்திடும்
சந்திராவதனதிரனே   கெம்பீரனே
சந்திராவதனதிரனே   சுரர்
எந்தையேயுனைச்   சிந்தையில் நானே
வந்தனைபுரிந்தே   னெந்தனையாளாய்   (மருதகிரி

சததள நளிநத விசுமிசை வதியொரு, என்னும் சந்தம்.

1. மரகத மயில்தனி லதிசய முடனிரு   [பாலன்
மகளிர்க ளுடனுல கொருநொடி தனிற்செலும் வேலன் சத்தி
2. கதிரொளி திரிபுர மஃதொரு நொடிதனி   [தன்
லழிதர விழிதிறந் தருள்சிவன் மிகுமகிழ் பாதன் ஞான போ
· மணிகல கலவெனு மொளியுள பரிபுர
மணிகல் பலதெளி மலைமக ளருளுப   தேசன் பவ நாசன்
அனுதின முனதருள் தனைமன துறுபவ
ர்க்கெடுத் தருள்புரி மறைமா புற்குரு நாதன் பணி வேதன்

ஸ்ரீராமச்சந்திரனே சீதாமனோகரனே, என்னும் சந்தம்.
இராகம்-தீரசங்கராபரணம் தாளம் - ஆதி.

1. பக்தர்கள் பணி குகனே
பங்கயத்தாள் மரு மகனே
பாலகுருநாத னென்னைக் கார் கார் கார்
அய்யனே எந்தன் துய்யனே

2. தானவர்கள் குல காலனே
மானவர்கள் பரி பாலனே
தீனர்களைக்கடைக்கண் பார் பார் பார்
நாதனே ஞான போதனே

3. புள்ளிமயில் வா[illegible] கனனே
வள்ளி மகிழ் [illegible] கனனே
தெள்ளு தமிழ் போதகனே கேள் கேள் கேள்
நாடினேன் பாதம் தேடினேன்

85490

4. நம்பி வந்தேனே மனம்
வெம்பி நொந்தேனே சினம்
தம்பித்தருள் புரிதல் சீர் சீர் சீர்
ஆதியே பரஞ் சோதியே

5. ஓடி வந்தேனே வேலா
தேடி நொந்தேனே சீலா
நாடியருள் புரிதல் நேர் நேர் நேர்
வாடினேன் புகழ் பாடினேன்

6. சூராதியர் சம் மாரா
பாரா* கர்ஷண‡ தீரா
நீராஞ்சனம்பெறவே வா வா வா
கோரவே பாலன் தேரவே

7. பணிந்தேனாறு முகா
துணிந்தேனே மால் ம ருகா
அணிந்தேனுன் தாள் சிரசில் பார் பார் பார்
பாவலா மறை நாவலா

8. நீலமயிலேறி தினம்
சீலமுடனே மனம்
வேலவனே வந்தென்னைக் கார் கார்
கார்ப்பாயே வினை தீர்ப்பாயே

---

* பாரா-நதி ‡ ஆகர்ஷணம்-கொணர்தல்

தைப்பூசத்தினிமை யுரை.

வேண்டினேன் சம்போகமே, என்கிற சந்தம்.

1. கோருவாய் தைப் பூசமே
குவலயத்தில் நேசமே
காதலான பாசமே
கந்தன் காயும் தேசமே

2 வேலனடிகள் நாடியே
வோடி வந்தேன் தேடியே
வாதைக்கடலை மூடியே
விரும்புவாயே பாடியே.

3. பக்தர்கள் பணி வேலனை
பார்வதியாள் பாலனை
பாவம் தீர்க்கும் சீலனை
பணியசுரர் காலனை

4. பணிந்தேனே மால் மருக
துணிந்தேனே நீர் வருக
திணிந்த பாசம் அருக
தணிந்தேனே வேல் முருக

தாஜராஜ தாஜராஜ அடுலராஜாஹோ, என்னும்சந்தம்.

பல்லவி.

வேலா கன்னி பாலா உன்னை வேண்டி வாமதனே

அனுபல்லவி.

வேலா வள்ளியானை லோலா மலைமகள் பாலா நம்பினேன் (வே.

சரணம்.

தாதனைச் சிறையி லடைத்ததி சுகுண விமலனே குமரகுக (க
வேதனைபோக்கவே பாதத்தைப்போற்றியே வேண்டினேனுறுமு
பாதனை நீக்கியே பாலனைத்தேற்றுவாய் பணிந்தேனே மால்மருக
ந்த பால குரு நாதனைக்கார்க்கவே

தேடியே மலர்ப் பாதா
நாடியே வரந் தாதா
பாடினேன் பிர சாதா (வேலா

மருதமலை வளமுநீர் வளமும்.

செந்தின்மாநகர் வாழ் கந்தநாதனிரு என்கிற சந்தம்.

1. கந்தநாதன் வாழும்
குன்றின் வளம்
குரைப்பேன் கேளாய்
பணிவேன் யானும்
கேட்டுமா மருத
திரும்புவாயே

சந்திராமருத
கொஞ்சமே உனக்
நெஞ்சமே கூறிப்
தஞ்சமே இதைக்
மலையைப்பார்க்க நீயும்
நெஞ்சமே.

2. அந்திரமளாவும்
விருக்ஷங்களும்
பந்திப்பது
பார்க்காதவர்
சுந்திரமான ஸ்ரீ
நெஞ்சமென்ன

விந்தமாமருத
கொஞ்சமோ அதைப்
நெஞ்சமோ மேரு
பஞ்சமோ மிகச்
கந்தனைப்பணியா
வஞ்சமோ.

3. அண்டரும் புகழும்
தண்டபாணி
காணுதவ
பாசபந்த
விட்டு மாயமாக
பட்டு ஓடும்

தொண்டரும் மகிழும்
மலையே அதைக்
ரிலையே காணித்
வலையே நம்மை
எட்டு காதவரை
தொலையே.

4. கோங்கு சந்தனம்
சம்புகத்தின
மந்தாரத்தைப்
ரந்தரத்தைக்
சன்னமாக வந்து
நன்னயுத்தைக்

கதலி பாரிஜாதம்
சேருமே நெல்லி
பாருமே உய
கோருமே தென்றல்
வன்னமாயுலாவும்
கோருமே.

5. தேனினுமினிய
செப்புவதற்
றப்பிதமும்
ஒப்புயர்வும்
மாசிலாதருண
யோகிகட்கும்

சீதளமான நீர்
சொணுதே அதி
காணுதே வே
தோணுதே மி
வாசியிற்பழகும்
கோணுதே.

மலடி வயிற்று மகன் போலே, எனும் சந்தம்.

1. அமுதம் கடைந்த திருக்கடல் போலே தேவ
அமுதமிருந்த தங்கச்சிமிழ் போலே சுரர்
அமுதமருந்தியமந்திரம் போலே இள நீர் போலே.

2. மகிதலம் புகழுமந்திரம் போலே கட
லுலகு மளந்த யந்திரம் போலே நர
ஜெகதலமகிழுஞ்சந்திரன் போலே கதி ரொளிபோலே.

3. கரையருகிற்கடலலை தானே செந்தா
மரையருவிக்கதிரொளி தானே சிவன்
சிரமுருவிப்படர் நதிதானே திரு முடிதானே

அழைப்பு.

இராகம்—பியாகு, தாளம்—ஆதி. கண்ணிகள்.

1. மருதமலை போவோம் வாடி மனக்கிளியே
முருகன் பதத்தை நாடி எந்தன் சகியே (ம
2. வில்லைப்போல் வளைந்ததடி வெற்றிக்குமரன்
வள்ளியுடன் வாசமடி அல்லலழிக்கும் (ம
3. மல்லிகை மலர் கொய்யடி வள்ளி லீலன்
மெல்லிய பாதம் உய்யடி கள்ளி பாலன் (ம
4. நித்தமும் பிரதம் போற்றடி விந்தையுற்ற
வித்தகனைமம் சாற்றடி நிதியருளும் (ம
5. முத்தியின் பொக்கிஷமடி முருகனென்பான்
பக்தர்கள் ரக்ஷகனடி முதல்வனிட (ம
புள்ளிமயில் வாகனடி போற்றுமன்ப
உள்ளமகிழ்யோகனடி பாதம் தொழவே (ம
7. நீற்றையணிந்துகொள்ளடி சம்சாரபந்த
வாற்றைக்கடந்துகொள்ளடி நேமத்துடன் (ம
பணிந்து பஜித்தானடி குருநாதன்
தணிந்து துதித்தானடி மகிழுறவே (மருதமலை

ஓரடித்தரு. இராகம்-மோகனம். தாளம்-ஆதி

பல்லவி.

மனமே சகிக்கேனினி சோகம் எந்தன்
சினத்தையடக்கவொரு இனித்த முறையுரைப்பாய் (மனமே

அநுபல்லவி.

தினந்தினமும் குமரன்பதந்தனைக் கண்டு
அனவரப்பாவத்தினக்கடல் விண்டு
அன்பர்களடிதனைச்சிரத்தினிற் கொண்டு
இன்பமொழிய*வொருவந்த வழியுமுண்டு (மனமே

தினமும் பணிவாய் குமரன் பாதம் மனத்தினைக்
கனமும் நீங்கவே புகழ் வேதம் புகழ்ந்தோதவே
சினமும் இனமும் போகும் காதம் புகழாவிடில்
மனமும் மதனம்‡சேருமன் னீதம் சேர்ந்துமேயுன்னைக்

கருத்தழிக்குங் கடலாம் பெருத்த சமுசாரத்திற் றள்ளி
சாயுஜ்யபோகம்
வெறுத்தொழிக்குமசுத்த மிகுந்த மேனியுடைய கள்ளி
மதிப்பாகவே
கருத்தவிழியினிட முறுத்த பார்வையினாலே இள்ளி
தலையையாட்டி
பெருத்த கொங்கையினிடமிருக்குமமுதத்தையே தெள்ளி
ஊட்டியபின்னர்
கடித்து முகத்தினோடு முகத்தனையணைத்துமே நெருக்கி
இணையாக்கிப்பின்
படித்து மதன்பதமாமிச்சைத்த கொக்கோக நூலைப் பெருக்கி
அநுபவித்து
தடித்தவழுக்கூற் பகக் குழிநிரம்பவே கரு சருக்கி
கீழே விழவே
வெடித்த நிதம்பக்குறி படித்த புண்ணியமெனுஞ் சிறுக்கி
கூறவுமான

சேயும் ஜெனனமென்று புனிதர் கொண் டாட
பாயும் விழியுடைய பூவையர் கூட
மாயவுடலுடைய மங்கை தன் னாட
மெய்யப்பித்த குருநாதனும் பாட (மன

* ஒருவந்தம்-ஏகாந்தம்; ‡ மதனம்-காமப்பற்று

மங்களம்.

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி.

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம் கணநாதர்க்கும் (மங்களம்)

அநுபல்லவி.

கங்கை யணிந்தவர்க்கும் சங்கையரும் வேலவர்க்கும்
மங்காத பக்த ருள்ளந் தங்கி நின்ற சீலருக்கும் (மங்

சரணம்.

1. அண்டமளந்தவர்க்கும் பிண்டமதிற்சென்றவர்க்கும்
தொண்டரிடர் தீர்த்தவர்க்கும் சண்டனையுதைத்தவர்க்கும் (மங்

2. இன்னிலம் படைத்தவர்க்கும் மன்மதனைக்காய்ந்தவர்க்கும்
அன்புடனே என்னையாளும் அன்னை யன்ன பூர்ணாவுக்கும் (மங்

3. முத்தியைத்தருபவர்க்குஞ் சத்தியைத்தொழுபவர்க்கும்
பக்த குருநாதனைத் தோத்திரக்கீர்த்தனங்கட்கும் (மங்

மலிதலருள் கீர்த்தனை முற்றிற்று.

ஸ்ரீ.

மருதகிரி வாஸ

ஸ்ரீ கந்தஸ்வாமி பேரில்

பஞ்சரத்தினம்.

தாரணி புகழக் கனகவே லேந்தித்
  தண்ணொளி வீசிடு மழகே
காரண ரூப மானதோர் பொருளே
  காதலிற் றொண்டர்கள் பணியப்
பூரண ஞான மீந்துநல் லடியர்
  புரைதவிர்த் தருடரு புலவா
காரணன் மருகா வெனவுனைத் தஞ்ச
  மடைந்தனன் மருதவெற் பிறையே. 1.

உமையவள் பெற்ற வொருமுருகேசா
  உண்மைய தாகநாள் தோறுங்
கமைபெறு நிலையோ டுன்னையே யுறுதி
  யாய்க்கரு தித்துதித் தேனுன்
சமைச்சமை யாகத் தொழுதிது காறுஞ்
  சரவண காண்கிலா தயர்ந்தே
னிமையினி லேறி யித்தகி வருவா
  யிஞ்சிசூழ் மருதவெற் பிறையே. 2.

முத்தியைப் பெறுமா றடியவர் கூட்ட
  [illegible]ன்றனை மனதினி லெண்ணித்
தித்திக்குந் தேனே யெனப்புகன் றுள்ளந்
  தீயினின் மெழுகெனக் கரைவார்
சத்திதன் குறையைத் தீர்க்கவே வேந்து
  சரவண சண்முக வுன்னை
பத்தியாய்ப் பணிந்தேன் பார்த்தருள் கடைக்கண்
  பார்புகழ் மருதவெற் பிறையே. 3

பஞ்சரத்தினம்

முல்லையி னோடு மலரிரு வாட்சி
மொய்த்திடு மொருமலை யினனே
தில்லையி லாடுங் காளகண் டன்றன்
திருநுதல் வருமொரு மைந்தா
கல்லினைப் போல விருக்குமென் னுள்ளங்
கரைந்துரு களிகொளு தருளு
இல்லையோ வுண்டோ வென்செய்வே னுமே
னிசைமிகு மருதவெற் பிறையே. ௪

அஞ்செனும் விருத்த மாக்கிக்கொண் டென்பால்
அடைந்தன னபயான் றிருகா
தஞ்சமா யடைந்த வென்னையோர் றிதங்
தாக்கிடா தருள்புரி சாமீ
நெஞ்சினி லுன்னை யன்றியே வேறு
தெய்வத நினைந்திடா ஞானம்
பஞ்சையின் மீது படர்த்த வருள்வாய்
பண்ணைசூழ் மருதவெற் பிறையே. ௫

பஞ்சரத்தினம் முற்றிற்று.

ஸ்ரீ

முருகன் தோத்திரம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நையுறுண் மருங்குல் காமப் பற்றனி
  பெதும்பை யார்கள்
துய்யபங் கயத்தை யேய்க்கு தூயவத்
  திரத்தி னார்கள்
கையினிடைக் களித்தி ருக்கக் கலபமா
  மயிலின் மீது
வையக முய்யப் போத மலர்க்கழல்
  பணிகு வேனே. 1.

குயின்மொழிக் குதலை வள்ளி குஞ்சரு
  தியர்கள் போற்றப்
பயன்றரு தவத்தி னுடல் பாடலிற்
  களிக்குந் தேவே
வியன்றரை மீத னேக விதனங்கட்
  காப்பட் டேனே
மயின்மிசை யேறிவந்து மாயவன்
  மருக காக்க. 2.

முருகன் தோத்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

அன்னபூர்ணா ஸஹாயம்.

85490

அட்டவணை.

நெம்பர்	கீர்த்தனைகள்.	பக்கம்.
1	நாதநாத நாதா குரு நாத நாத நாதா குரு	6
2	கொஞ்ச லணுகாப் பார்த்தருளுமீசனே ஈசனே	ஷை
3	ஈசனே பர மேசனே	7
4	ஈசனே ஓடி வா நேசனைத் தேடி வா	8
5	ஆறுமுக வேலனே காருஞ் சத்தி பாலனே	9
6	மருதகிரியின் மீது சுருதியே நின்றவா	ஷை
7	மரகத மயில்தனி லதிசய முடனிரு	10
8	பக்தர்கள் பணி குகனே	11
9	கோருவாய் தைப்பூசமே	12
10	வேலா கன்னி பாலா உன்னை வேண்டி வந்தனே	ஷை
11	கந்தநாதன் வாழுஞ் சுந்திரா மருத மலையின்	13
12	அமுதம் கடைந்த திருக்கடல் போலே	14
13	மருதமலை போவோம் வாடி	ஷை
14	மனமே சகிக்கேனினி சோகம்	15
15	மங்களம் மங்களம் மங்களம் கணநாதர்க்கும்	16

முற்றிற்று.

O26:417.2118.M
N12